Crl.Misc.39

D E P O S I T I O N   O F   W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. STC.27/2021

**P.W**. 2(LW5)

| | |
|---|---|
| Name | : **திரு. சரவணன்** |
| Father/Husband Name | : திரு, |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

2வது எதிரி ஆஜரில் உள்ளார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.07.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் இதற்கு முன்பு கூடுவாஞ்சேரி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்று திருவள்ளூர் மாவட்டத்தில் வசித்து வருகிறேன்.

2) கடந்த 02.02.2017ம் தேதி காலை 6 மணியளவில் மாமல்லபுரம் மதுவிலக்கு அமல் பிரிவில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது கிடைத்த ரகசிய தகவலின் பேரில் நானும், தலைமை காவலர் 1226 செல்வராஜ், தலைமை காவலர் 161 சுரேஷ், தலைமை காவலர் 224 ஜெயசந்திரன், பெண் தலைமை காவலர் 1270 சுமதி ஆகியோர் சகிதம் பரமசிவம் நகர், எம்.என்.குப்பம் ஆகிய இடங்களில் கண்காணித்துவிட்டு அமணம்பாக்கம் காலணி மாரியம்மன் கோவில் தெருவில்

கண்காணித்தபோது ஒரு வீட்டின் அருகே ஒரு ஆண் நபர் கோணிப்பைகளுடன் நின்றுக் கொண்டிருந்தார். அவர் மீது சந்தேகப்பட்டு அருகே சென்றபோது எங்களை கண்டு தப்பி ஓட முற்பட்டவரை பிடித்து விசாரணை செய்தபோது முன்னுக்கு பின் முரணாக பதில் சொன்னார். அவரின் பெயர் கெம்புராஜ் த/பெ. சொக்கலிங்கம் என்று சொன்னார். அவர் அருகில் இருந்த கோணிபைகளை சோதனை செய்து பார்த்த போது ஒரு கோணி பையில் சுமார் 100 எம்.எல் அளவு கொண்ட 200 பாக்கெட்டுகளில் மொத்தம் 20 லிட்டர் திரவம் இருந்தது. அதில் ஒரு பாக்கட்டை பிரிந்து நுகர்ந்து பார்த்தபோது அதில் விஷ நெடியுடன் கூடிய வாய் குமட்டலும், நெஞ்செறிச்சலும் ஏற்படும் வகையில் திரவம் இருந்தது. எனவே அது விஷ நெடியுடன் கூடிய எரிசாராயம் என்பதால் எதிரி கெம்புராஜ்சை காலை 6.00 மணியளவில் கைது செய்து எதிரியிடமிருந்த வழக்கு சொத்தினை கைப்பற்றி பொது ஜன சாட்சிகள் யாரும் முன்வராததால் தலைமை காவலர் 1226 செல்வராஜ் மற்றும் தலைமை காவலர் 161 சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தேன். பின்னர் எதிரி தாமாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். பின்னர் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களிலிருந்து சுமார் 500 எம்.எல் அளவு கொண்ட ஒரு கோணி பையில் இருந்து இரண்டு பாட்டில்களில் எரிசாராயத்தை எடுத்து சீல் வைத்து லேபிள் ஒட்டி மீதம் இருந்த எரிசாராயத்தை சம்பவ இடத்திலேயே கொட்டி அழித்து அழித்தல் சான்று தயார் செய்தேன். **(அழித்தல் சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் காவல் நிலையம் வந்து எதிரி மீது நிலைய குற்ற எண். 54/2017 சட்டப்பிரிவுகள் 4(1)(a), 4(1–A) TNP Act r/w 6 & 11 of RS Rules–ன் படி வழக்கு பதிவு செய்தேன்.( **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக**

**குறியீடு செய்யப்படுகிறது**). எதிரி கெம்புராஜை நீதிமன்றக் காவலுக்குட்படுத்தினேன். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள ஆஜர் எதிரி ராஜேந்திரன் (எ) நொண்டி ராஜேந்திரன் என்பவர் தலைமறைவாகிவிட்டார். அவர் முன் ஜாமின் பெற்றுக் கொண்டதால் அவரை கைது செய்ய இயலவில்லை. **(ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதியான அதில் வருமானம் இல்லாததால் மீண்டும் சாராய தொழிலில் ஈடுபட எடையாத்தூரை சேர்ந்த ராஜேந்திரன் (எ) நொண்டி ராஜேந்திரன் என்பவர் மூலம் சாராயம் வாங்கி விற்பனை செய்து வருகிறேன். அவர் ஏற்கனவே எரிசாராயம் விற்பனை செய்பவர்" என்ற பகுதி மட்டும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்திலிருந்து மாதிரிக்கு எடுக்கப்பட்ட 500 எம்.எல் அளவு கொண்ட 2 பிளாஸ்டிக் பாட்டில்களை நீதிமன்றத்தில் படிவம் 91 மூலம் ஆஜர்படுத்தினேன். **(படிவம் 91 அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் நான் பணி மாறுதலில் சென்றுவிட்டதால் வழக்கு கோப்பினை எனக்கு பின்னர் வந்த காவல் ஆய்வாளர் தனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கையை நான் தான் பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்யப்பட்ட நேரம் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் முதல் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளேன். இந்த வழக்கில் கிடைக்கப்பெற்ற ரகசிய தகவலானது எந்த நேரத்தில் எந்த இடத்தில் இருக்கும்போது கிடைத்தது என்கிற விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் காவல் நிலையத்தில் இருந்த போது ரகசிய தகவல் கிடைத்தது. காவல் நிலையத்திலிருந்து

புறப்பட்டோம் என்கிற விவரத்தை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்கமாக காவல் நிலையத்தில் குறிப்பிட்ட நேரத்தில் எத்தனை காவலர்கள் இருக்கிறார்கள் என்கிற விவரத்தை பதிவு செய்வோம் என்றால் சரிதான். அந்த விவரத்தை நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்திலிருந்து சம்பவ இடமானது சுமார் 6 கி.மீ. இருக்கும். மதுவிலக்கு வேட்டைக்காக எந்த வாகனத்தில் சென்றோம் என்கிற விவரத்தை குறிப்பிட்டு முதல் தகவல் அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். மதுவிலக்கு வேட்டைக்காக செல்லும் போது ரசாயன பரிசோதகர் யாரையும் அழைத்துச் செல்வோமா என்றால் இல்லை. எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டது எரிசாராயமா என்பதை எதை வைத்து முடிவு செய்தேன் என்றால் வழக்கமாக அனுபவத்தின் மூலம் முடிவு செய்தேன். இந்த வழக்கில் எரிசாராயத்தை யார் நுகர்ந்து பார்த்து அவருக்கு கண்ணெரிச்சல் ஏற்பட்டது என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் நான் தான் எரிசாராய பாக்கெட்டுக்களை கிழித்து நுகர்ந்து பார்த்தேன். முதல் தகவல் அறிக்கையில் சம்பவ இடமானது எதிரியின் வீட்டிற்கு அருகில் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடமான எதிரியின் வீட்டிற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் காலை 6 மணிக்கு சென்றேன். முதல் தகவல் அறிக்கையில் எதிரியை 6 மணிக்கு கைது செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எதிரியை கைது செய்த இடமானது வீடுகள் நிறைந்த பகுதி என்றால் சரிதான். எதிரியை கைது செய்த இடத்தில் பொதுமக்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்றால் சரிதான். பொதுமக்கள் யாரையும் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் பொது ஜன சாட்சிகள் யாரும் முன்வரவில்லை. பொது ஜன சாட்சிகள் யாரும் முன்வராதபோது கிராம

நிர்வாக அலுவலரை இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எதிரியை கைது செய்த சம்பவத்திற்கு பிறகு நான் மதுவிலக்கு வேட்டைக்கான ரோந்து பணியை தொடர்ந்து மேற்கொண்டேனா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் எதிரியிடமிருந்த கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தினை அழித்தற்கான புகைப்பட ஆதாரங்களோ அல்லது வீடியோ ஆதாரங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜர், அழித்தல் சான்று ஆகியவற்றில் நேரம் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மாதிரிக்கு எடுக்கப்பட்ட திரவம் எந்த பிளாஸ்டிக் பாட்டில்களில் கைப்பற்றப்பட்டது என்றால் நாங்கள் காவல் நிலையத்திலிருந்து பிளாஸ்டிக் பாட்டில்களை எடுத்துச் செல்வோம். அதில் தான் திரவம் எடுக்கப்பட்டது. ரசாயன பகுப்பாய்விற்காக எந்த தேதியில் மாதிரியை சென்னை தடய அறிவியல் ஆய்வாளத்திற்கு அனுப்பினேன் என்றால் எனக்கு பின்னர் வந்த காவல் ஆய்வாளர் தான் அனுப்பினார். இந்த வழக்கில் 2வது எதிரியை சம்பவ இடத்தில் நான் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் அவரை கைது செய்யவில்லை என்றாலும் சரிதான். இந்த வழக்கில் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் ரகசிய தகவல் எதுவும் கிடைக்கப்பெறவில்லை என்றாலும் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும் சம்பவ இடத்தில் 1வது எதிரியை சொன்ன நேரத்தில் கைது செய்யவில்லை என்றாலும், அவரிடமிருந்து எந்த ஒரு வழக்கு சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து வழக்கிற்கு ஏதுவாக பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் 2வது எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களை பொது மக்கள் முன்னிலையில் அழிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. 1வது

எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்கு மூலத்தை சம்பவ இடத்தில் பெற்றேன். ஒப்புதல் வாக்குமூலத்தை யார் தட்டச்சு செய்தார்கள் என்ற விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.